## ரூ.6848 கோடியில் வடசென்னை வளர்ச்சித் திட்டப் பணிகள் !

# ‘முதல்வர் படைப்பகங்கள்’ தமிழ்நாட்டு வரலாற்றில் என்றும் நிலைத்து நிற்கும்!

## சட்டப்பேரவையில் – சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும மானியக் கோரிக்கை பதிலுரையில் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு பெருமிதம் !



**சென்னை, ஏப்.9-**

**சட்டப்பேரவையில் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் துறை மானியக் கோரிக்கை பதிலுரையில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு பதிலளிக்கையில் முதல்வர் படைப்பகங்கள் தமிழ்நாடு வரலாற்றில் என்றும் நிலைத்து நிற்கும் என்று பெருமையுடன் குறிப்பிட்டார். மேலும் இத்துறையில் 15 முத்தான அறிவிப்புகளை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வெளியிட்டார்.**

சட்டப்பேரவையில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு பதிலுரை வருமாறு:-

சமன் செய்து சீர்தூக்கும் கோல் போல சட்டப்பேரவையை வழிநடத்தும் பேரவைத் தலைவர் அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) தன்னம்பிக்கையால் வென்றவரே, எங்கள் முதல்வரின் நன்னம்பிக்கையை பெற்றவரே, அவர் நம்பிக்கையை பெற்றதனால் அவை நம்பிக்கையில் ஜெயித்தவரே, பேரவைத் தலைவர் அவர்களே, முதல் வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) திசைகள் எட்டும் திரும்பிப் பார்க்கும் திராவிட மாடல் முதல்வருக்கு என் வணக்கம். கீழடி நாகரிகத்தின் முதல் காலடி என்று உலகறிய செய்தவர். இரும்பைக் கண்டுபிடித்தவர்கள் தமிழர்கள்தான் என்கிறது ஆராய்ச்சி. இரும்பு முதல்வரைக் கண்டுபிடித்ததும்

## ரூ.48 கோடி மதிப்பீட்டில் வண்ண மீன் விற்பனை மையம்!

தமிழர்கள்தான் என்பதற்கு எங்கள் முதல்வரே சாட்சி. (மேசையைத் தட்டும் ஒலி)

நிதி கொடுக்க மறுக்கின்ற பிடிவாதம், மக்களைப் பிளவுபடுத்த நினைக்கின்ற மதவாதம், இந்தி மொழியைத் திணிக்கின்ற அதிகாரம், இவற்றைத் தடுத்து நிறுத்தவந்த தனி மனித இராணுவம், எங்கள் முதல்வரை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடக்க நினைத்தால் அடங்க மாட்டோம், மடக்க நினைத்தால் மடங்க மாட்டோம், முடக்க நினைத்தால் முடங்க மாட்டோம், தலைகீழாக பிடித்தாலும், நிமிர்ந்தே எரியும் நெருப்பைப்போல், தமிழினத்தைத் தலை நிமிரச் செய்யும் எங்கள் தலைவருக்கு மீண்டும் ஒரு வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

## ரூ.45 கோடியில் 7 பன்னோக்கு மையங்கள்!

தன்மானத்தையே தன் வானமாக்கி நடந்த பகுத்தறிவுப் பகலவன், தந்தை பெரியாரின் நகல் இவர். இந்த பூமியை ஆதிசேடன் தாங்குவதாக, வரலாறு கூறுகிறது. அதுபோல், இந்தத் தமிழகத்தையே தன் தலையில் தாங்குகின்ற சமூக நீதி சேடன், எங்கள் முதல்வருக்கு மீண்டும் ஒரு வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

கல்லாமையை நீக்கினால், இல்லாமை நீங்கிவிடும் என, அறிவுப் பசியோடு வருகிற மாணவர்களின் வயிற்றிப் பசியை நீக்கியவர், எங்கள் முதல்வர். மற்றவர்கள் பார்த்தது, மாணவர்களின் புத்தகப் பையை. ஆனால், எங்கள் முதல்வர் அவர்கள் பார்த்ததோ, மாணவர்களின் இறைப்பையை. (மேசையைத் தட்டும் ஒலி)

உளியால் சிலைகளைச் செதுக்குபவர், சிற்பி. எழுதுகோலால் எண்ணங்களைச் செதுக்குபவர், எழுத்தாளர். தூரிகையால்வண்ணங்களைசெதுக்குபவர், ஓவியர். உழைப்பு, உழைப்பு, உழைப்பு என, உழைப்பாலேயே தன்னை செதுக்கிக் கொண்ட தலைவரானவர், எங்கள் முதல்வர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) உழைப்பின் ஊற்றே, நாங்கள் சுவாசிக்கும் காற்றே, எனக்குத் தலைவராகவும், சகோதரராகவும், என்னை வழிநடத்தும் ஆசானாகவும் விளங்கும் எங்கள் முதல்வருக்கு மீண்டும், மீண்டும் வணக்கம். அரசியல் வானத்தில், சூரியனும், நிலவும் போல் ஜொலித்துக்கொண்டிருப்பவர்கள், எங்கள் முதல்வரும், துணை முதல்வரும். (மேசையைத் தட்டும் ஒலி) சூரியனிட மிருந்து ஒளியைக் கடன்வாங்குகிறது, நிலவு என்பார்கள். ஆனால், இந்த சூரியனிடமிருந்து, உழைப்பைக் கடன் வாங்கி, ஜொலிக்கிறது, உதயா எனும் நிலவு. (மேசையைத் தட்டும் ஒலி)

விளையாட்டு என்றால், வெற்றி தோல்விகள் உண்டு. ஆனால், எங்கள் உதயா ஆடும் ஆட்டங்களில், வெற்றி மட்டுமே அவருக்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி)

எங்கள் தளபதியின் வார்ப்பு அவர், இளம் சமுதாயத்தின் ஈர்ப்பு அவர். அன்னைக் கலைஞரின் சேர்ப்பு அவர், வருங்காலத்தை எழுதப்போகும் நாளைய தீர்ப்பும் அவர். (மேசையைத் தட்டும் ஒலி)

பெயரில்தான் நான் துணை முதல்வர், அனைத்து அமைச்சர்களும் இந்த ஆட்சியின் துணை முதல்வர்கள்தான் என்று (மேசையைத் தட்டும் ஒலி) தன் னடக்கத்தைக் கற்றவரே, தலைவரைப் போல் மக்கள் மனங்களை வென்றவரே, துணை முதல்வர் அவர்களே, தங்களுக்கும் என் பாசமிகு வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

துறையின் மேன்மைக்கு எந்நாளும் உதவி செய்துகொண்டிருக்கின்ற முத்துசாமி அவர்களுக்கு ஒரு வணக்கம். துறைக்குத் துணையாக இருக்கின்ற தா.மோ. அன்பரசன் அவர்களுக்கும் என் வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தியப் பெருநகரங்களில் பெருமை வாய்ந்த நகரங்களில், நம் சென்னைப் பெருநகரமும் ஒன்று. வாழ்கிறவர்களையும், வாழ்வாதாரம் தேடி வருகிறவர்களையும் தாய் மடிபோல் தாங்கிக்கொண்டிருக்கிற நகரம், நம் சென்னைப் பெருநகரம். இந்த மாநகரை, காலத்திற்கேற்ப வளர்ச்சியடைய வைக்க, 1972 ஆம் ஆண்டு, சரித்திரத்திற்கே பெருமை சேர்க்கும் சகாப்த நாயகன், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் உருவாக்கப்பட்டது என்பதை இங்கு நான் பதிவு செய்ய கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவைத் தலைவர் அவர்களே, காலத்தை வென்ற காவியத் தலைவர், ஓய்வெடுக்கும் இடத்தில் வங்கக் கடலலைகள் வந்து, வந்து தமிழ் படித்துச் செல்லும் எங்கள் தங்கத் தலைவர், கலைஞரின் புகழ்மீது பூக்களை அள்ளித் தூவி, என்னுடைய பதிலுரையைத் துவக்குகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தை திட்ட அனுமதி வழங்கல் என்கின்ற எல்லைக்குள் மட்டும் வைத்திருந்தார்கள், கடந்த காலத்தில்.

கல்வி நிலையங்கள், நூலகங்கள், படைப்பகங்கள், பேருந்து நிலையங்கள், மருத்துவமனைகள், விளையாட்டு மைதானங்கள், பூங்காக்கள் என மக்கள் நலப் பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்து, கட்டுமானங்களை உருவாக்கி கொடுத்து சமுதாய வளர்ச்சியில் முக்கியப் பங்கு வகிக்கச் செய்தவர் நம்முடைய செயல் மிக்க முதல்வர் அவர்கள். எங்கள் முதல்வர் அவர்கள் எதையும் புதிதாக சிந்திக்கின்றார்.

1902 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட சலவைக் கூடம், டோபிகானா என்று அழைக்கப்படுகின்ற சேத்துப்பட்டு சலவைக்கூடம். கிட்டத்தட்ட 122 ஆண்டுகள் பழமை வாய்ந்த அந்த சலவைக் கூடத்தை சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் ரூ.15 கோடி செலவில் இன்றைக்கு புதுப்பொலிவு பெற வைத்திருக்கிறார் முதல்வர் அவர்கள். அதோடு மட்டுமல்ல, பட்டாளத்திலே 75 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட, Conran Smith நகரில் அமைந்திருக்கின்ற டோபிகானாவையும் ரூ.12 கோடி செலவில் புதுப்பித்து இந்த நவீன காலத்திற்கு ஏற்றாற்போல் அதை வடிவமைக்க உத்தரவிட்டிருக்கின்றார் எங்களுடைய முதல்வர் அவர்கள். கரை நீக்கும் சலவைத் தொழிலாளிகளின் குறை நீக்குபவர் அல்லவா எங்கள் முதல்வர்.

பேரவைத் தலைவர் அவர்களே, ‘நீரின்றி அமையாது உலகு’ என்பது திருவள்ளுவர் வாக்கு. காலங்காலமாக சென்னை மாநகர மக்களுக்கு தாய்ப் பால் போன்று தண்ணீரை கொடுத்துக் கொண்டிருப்பவை ஏரிகள். ஏரி வளங்களை சீரமைப்புச் செய்யும் மகத்தான பணிகளை மேற்கொள்ளுமாறு எங்களுக்கு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். அந்தவகையில், புழல் ஏரி என்பது 1876 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இந்த ஏரியோடு சேர்த்து மேலும் 12 ஏரிகளின் புனரமைப்பை முதல்வர் அவர்கள் எங்களுக்கு வழங்கியிருக்கின்றார். நீர் நிலையாக இருக்க வேண்டும். நீர் என்பது நிலையாக இருக்க வேண்டும். அதிலே நீரும் நிலையாக இருக்க வேண்டும் என்பது எங்களுடைய முதல்வர் அவர்களின் கொள்கை. அதுமட்டுமல்லாமல், குளங்களும் நிரம்பியிருக்க வேண்டும்; தண்ணீர் குடங்களும் நிரம்பியிருக்க வேண்டும் என்ற கொள்கையோடு 13 ஏரிகளை சீரமைக்க உத்தரவிட்டிருக்கின்ற முதல்வர் அவர்களுக்கு வணக்கம்.

பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டினுடைய இன்றியமையாத ஒரு சேவை தற்போது போக்குவரத்து என்ற ஒரு சூழல் வந்திருக்கிறது. அந்தப் போக்குவரத்திலே பயணம் செய்கின்ற மக்கள், நடுத்தர மக்கள், ஏழை எளிய மக்கள்.

## சென்னையில் ரூ.40 கோடியில் 15 முதல்வர் படைப்பகங்கள்!

அவர்களின் போக்குவரத்து பயணம் சீராக அமைவதற்காக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இருந்தபோது, 1967 ஆம் ஆண்டு அம்பத்தூரில் ஒரு பேருந்து நிலையத்தை அவரது திருக்கரங்களால் திறந்து வைத்தார். அந்தப் பேருந்து நிலையத்தின்மீது இன்றைக்கு முதல்வர் அவர்களின் பார்வை பட்டதால், ரூ.15 கோடி செலவில் அந்தப் பேருந்து நிலையம் புனரமைக்கப்படு கின்றது.

அதோடு மட்டுமல்ல, சென்னை மாநகரத்தின் முதல் பேருந்து நிலையம் 1972 ஆம் ஆண்டு தண்டையார்பேட்டையில் கட்டப்பட்டது. நம்முடைய உறுப்பினர் எபினேசர் அவர்களின் கோரிக்கை முதல்வர் அவர்களின் கவனத்திற்கு சென்றவுடன் இன்றைக்கு ரூ.15 கோடி செலவில் அந்தப் பேருந்து நிலையமும் தற்போது கட்டப்பட்டு வருகிறது. இதுமட்டுமல்லாமல், சென்னையில் 19 பேருந்து நிலையங்களை மக்கள் பணிக்காக முதலமைச்சர் அவர்கள் ஒப்படைத்திருக்கின்றார். கூத்தம்பாக்கத்தில் கடந்த காலத்தில் சீரான வடிவமைப்பு இல்லாத காரணத்தினால், அந்தப் பேருந்து நிலையத்தின் பணிகளை விரிவடையச் செய்து, ரூ.414 கோடி செலவில் அந்தப் பேருந்து நிலையத்தை ஜூன் அல்லது ஜூலை மாதத்தில் முதல்வர் அவர்கள் பயன்பாட்டிற்கு ஒப்படைக்க இருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சியையும் இந்த நேரத்தில் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். போக்குவரத்துத் துறை மூலமாக பயணம் செய்கின்ற பயனாளிகளுக்கு செங்கல்பட்டிலே ரூ.97 கோடி செலவிலும், மாமல்லபுரத்தில் ரூ.98 கோடி செலவிலும், முடிச்சூரில் ரூ.48 கோடி செலவிலும் பேருந்து நிலையம் என்று மக்களுடைய பயணம் இருக்கிறது. விடியல் பயணம் என்பது மகளிருக்கான பயணம் என்றால், புதிய பேருந்து நிலையம் என்பதை நடுத்தர மக்களின் இனிய பயணத்திற்காக மாற்றியிருக்கின்ற முதல்வர் அவர்களுக்கு இந்த நேரத்தில் நன்றி.

### 16 ஏக்கரில் காலநிலைப் பூங்கா

பூங்காக்கள் மகிழ்ச்சியையும், உடல் ஆரோக்கியத்தையும் பேணிகாக்கப் பயன்படுகின்ற பசுமை பண்ணைகள் என்பார்கள். அந்தவகையில் சென்னைப் பெருநகரில் புதுப்புது பூங்காக்களை அமைப்பதற்கு முதல்வர் அவர்கள் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு உத்தரவு வழங்கியிருக்கிறார். அந்தவகையில் 16.6 ஏக்கர் நிலப்பரப்பில் போரூரில் பசுமை நாயகன் என்று நம்மால் போற்றப்படுகின்ற எம்.எஸ். சாமிநாதன் அவர்கள் பெயரில் ஓர் ஈரநிலப் பூங்கா, கிளாம்பாக்கத்தில் 16 ஏக்கர் நிலப் பரப்பில் ஒரு காலநிலைப் பூங்கா.

கிளாம்பாக்கத்தில் 6 ஏக்கர் நிலப் பரப்பில் ஒரு நீரூற்றுப் பூங்கா. நீரூற்றுப் பூங்கா, காலநிலைப் பூங்கா, ஈரநிலைப் பூங்கா என்று பூங்காக்கள் உருவாக்கும் பணிகள் தொடரும். சென்னை மாநகர் முழுவதும் பசுமைப் புரட்சி இந்த முத்தமிழ் வித்தகர் ஆட்சியிலே தொடரும் என்பதை இந்த நேரத்தில் பதிவிடக் கடமைப் பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) பூங்காக்கள் என்பது பெருநகரத்தின் காட்சிக்கு மட்டுமல்ல, திராவிட மாடல் ஆட்சிக்கும் அழகூட்டுபவையாக அவை அமையும்.

பேரவைத் தலைவர் அவர்களே, விளையாட்டு மைதானங்கள். விளையாட்டு என்பது உடலுக்கு பலம் தருவது, உள்ளத்திற்கு நலம் தருவது. இது விளையாட்டுத் துறையின் பொற்காலம். எங்கள் துணை முதல்வர் அவர்கள், விளையாட்டுத் துறை அமைச்சரான பிறகு, தடம் தெரியாத வீரர்கள், வெற்றித் தடம் பதித்துக் கொண்டிருக்கின்றார்கள். வாய்ப்புக் கிடைக்காதவர்கள் எல்லாம் இன்றைக்கு வாகை சூடிக்கொண்டிருக்கின்றார்கள். அதற்குக் காரணம், துணை முதல்வர் அவர்கள் என்பதை இந்த நேரத்தில் பதிவிட கடமைப்பட்டிருக்கின்றேன்.

சென்னை பெருநகர் பகுதியில் மட்டும் பழமை மற்றும் புதிய 19 விளையாட்டு மைதானங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. அதில் குறிப்பிட்டு கூற வேண்டுமென்றால், வெள்ளையர் ஆட்சியில் ஏற்படுத்தப்பட்ட பின்னி மில் அருகில் இருக்கிற கன்னிகாபுரம் விளையாட்டு மைதானம் 80 ஆண்டுகளுக்கு முற்பட்ட விளையாட்டு மைதானம். சட்டமன்றப் பேரவை உறுப்பினர் தாயகம் கவி அவர்களின் கோரிக்கைக்கேற்ப, அந்த விளையாட்டு மைதானம், தற்போது 20 கோடி ரூபாய் செலவில் அனைத்து வசதிகளோடு புனரமைக்கப் படுகிறது.

இந்த மைதானங்கள், உலகத்தரம் வாய்ந்த வீரர்களை உருவாக்கும். (மேசை யைத் தட்டும் ஒலி) விளையாட்டுத் துறையில் நம் முதல்வரின் பெயர் என்றும் நிலைத்து நிற்கும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சென்னை பெருநகரின் எழில் முகம் தென்சென்னை என்பார்கள்.

ஆனால், தொழில் முகம் என்றால் அது வடசென்னை. சென்னை பெருநகரத்தின் எழில் முகம் தென்சென்னை என்றால், தொழில் முகம் என்பது வட சென்னை.

### முதல்வருக்கு நூறாயிரம் கோடி நன்றி!

கோட்டை கட்டியவர்கள் வட சென்னை வாசிகள். அவர்கள் குடிசைகளிலும், தார்ச் சாலை அமைத்தவர்கள் சாலை ஓரங்களிலும் வாழ்கின்ற இடமாக இருந்த வடசென்னையை பலரும் ஓரக் கண்ணால் பார்த்து கடந்து சென்று விட்டார்கள். எங்கள் முதல்வர் அவர்கள் ஒருவர்தான், அதை ஈரக் கண்ணால் பார்த்து, இரக்கப்பட்டவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், நம்முடைய முதல்வர் அவர்களும்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

அந்த வகையில் இன்றைக்கு 2023-2024 ஆம் ஆண்டு, வட சென்னை வளர்ச்சித் திட்டம் என்று தன் சிந்தையிலே உருவான 1,000 கோடி ரூபாய் அளவிற்கு ஒரு திட்டத்தை அறிவித்திருந்தார். அந்தத் திட்டம், நாளுக்கு நாள் ஆல்போல் தழைத்து, அருகுபோல் பெருகும் என்பார்கள். தற்போது, அந்தத் திட்டத்தினுடைய மதிப்பு 6,848 கோடி ரூபாய் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளவிருக்கின்ற பணிகள் 252 திட்டங்கள்.

வடசென்னை வளர்ச்சித் திட்டத்திற்காக 6,000 கோடி ரூபாய்க்கு மேல் ஒதுக்கிய முதல்வர் அவர்களுக்கு நூறாயிரம் கோடி முறை நன்றி சொல்ல வட சென்னை மக்கள் தயாராக இருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தத் திட்டத்தோடு இது ஒரு முடிவல்ல; ஒவ்வொருவர் வாழ்விலும் விடிவு வரும்வரை தொடரும்; இந்தப் பணிகளை நிறைவேற்ற முதல்வர் அவர்கள், தன்னுடைய துணை முதல்வர் அவர்களை களத்திலே நிறுத்தியிருக் கின்றார். கலைஞரின் வழித்தடத்தில் ஆட்சிகண்ட நம் முதல்வர் அவர்கள், வடசென்னை வளர்ச்சித் திட்டத்தில், இதுவரையில் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு இல்லாத ஒரு சலுகையாக 1,476 வீடுகளைக் கட்டுவதற்கு ஒப்புதல் அளித்து, அவருடைய பொற்கரங்களாலேயே, அந்தக் கட்டுமானப் பணியைத் துவக்கி வைத்து, பெருநகர சென்னைக்கு பெருமை சேர்த்த முதல்வர் அவர்களுக்கு இந்த நேரத்தில் என்னுடைய வணக்கம். குடிசையில் இருந்தவர்களையும் அடுக்கு மாடிக் குடியிருப்பில் குடியமர்த்தி, அழகுபார்த்தது எங்கள் முதல்வர் ஆட்சி. இதற்கு இந்தத் திட்டமே ஒரு சாட்சி.

### முதல்வர் படைப்பகங்கள்!

முதன்முதலாக முதல்வர் அவர்களுடைய சிந்தையிலே உதித்திட்ட மற்றொரு திட்டம் இந்தத் திட்டம். கல்விதான் மிகப் பெரிய சொத்து. அதை உங்களிடமிருந்து யாரும் திருட முடியாது என்று சொன்னவர் நம்முடைய முதல்வர் அவர்கள். கல்விக்காக புதுமைப் பெண் திட்டம், கல்விக்காக தமிழ்ப் புதல்வன் திட்டம், கல்விக்காக காலைச் சிற்றுண்டி திட்டம் தந்து, தமிழ்நாட்டையே கல்வி நாடாக மாற்றியவர் முதல்வர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

வசதியற்ற மாணவர்கள் வசதியாய் படிக்கவும், வாய்ப்பற்றவர்களுக்கு வாய்ப்புகள் கிடைக்கவும் முதல்வர் அவர்களின் சிந்தையில் உதித்த இந்த மகத்தான திட்டத்தின் பெயர்தான் முதல்வர் படைப்பகம்.

முதன்முதலில் இந்த முதல்வர் படைப்பகத்தை 4.11.2024 கொளத்தூர் தொகுதிக்கு முதல்வர் அவர்கள் படைத்தார்கள். இந்தப் படைப்பகத்தின் வாயிலாக இன்றைய தினம் வரை, அந்த படைப்பகத்தைப் பயன்படுத்திய மாணவச் செல்வங்களுடைய எண்ணிக்கை 30 ஆயிரம் என்பதை இந்த நேரத்தில் நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எல்லோருக்கும் எல்லாம் என்ற முதல்வர், கொளத்தூரோடு இந்தப் பணி நிற்கக் கூடாது என்பதற்காக மேலும் 15 படைப்பகங்களை படைப்பதற்கு உத்தரவிட்டு இந்த அறிவிப்பிலே அதை அறிவிக்க இருக்கிறோம் என்ற மகிழ்ச்சியையும் உங்களோடு பகிர்ந்து கொள்கிறோம். நமது முதல்வர் படைப்பகங்கள் வரலாற்றில் என்றும் நிலைத்து நிற்கும்.

### 18 பள்ளிகளில் கட்டமைப்பு மேம்பாடு

பள்ளிக்கூடங்கள். தேசத்தின் எதிர்காலம் வகுப்பறையில்தான் உருவாகிறது என்றார்கள் பெரியவர்கள். முதல்வரின் நல்லாட்சியில் சென்னை பெருநகரப் பகுதிகளில் 18 பள்ளிகளில் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. அதில் உறுப்பினர் மாதவரம் சுதர்சனம் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அவருடைய தொகுதியான புழலுக்குச் சென்றோம். அங்கே ஒரு பள்ளிக்கூட கட்டடத்தைக் காட்டினார். பெரியவர் பக்தவச்சலம் அவர்கள் காலத்தில் கட்டப்பட்டிருந்த பள்ளிக்கூடம் அது. அந்தப் பள்ளிக்கூடத்தை இப்போது இடித்து மீண்டும் மறு கட்டுமானம் செய்து புதுப் பொலிவு செய்ய இருப்பவர் முதல்வர் அவர்கள் என்பதை இந்த நேரத்திலே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

> “ சென்னையில் சாலைகள் பேசும் முதல்வரின் அருமையை! பாலங்கள் பேசும் முதல்வரின் பெருமையை! மழைநீர் வடிகால்கள் பேசும் முதல்வரின் சிறப்பை! மெட்ரோ இரயில்கள் பேசும் முதல்வரின் சிந்தனையை! விழா அரங்கங்கள் பேசும் முதல்வரின் கலை நோக்கை! கல்வி நிலையங்கள் பேசும் முதல்வரின் தொலைநோக்கை! மருத்துவமனைகள் பேசும் முதல்வரின் கருணையை! பேருந்து நிலையங்கள் பேசும் முதல்வரின் கடமையை! பூங்காக்கள் பேசும் முதல்வரின் அழகுணர்வை! நூலகங்கள் பேசும் முதல்வரின் அற உணர்வை! ஏரிகள் பேசும் முதல்வரின் ஈரத்தை! விளையாட்டு மைதானங்கள் பேசும் முதல்வரின் தீரத்தை! முதல்வர் படைப்பகங்கள் பேசும் முதல்வரின் ஊக்கத்தை! தோழி விடுதிகள் பேசும் முதல்வரின் அக்கறையை! வெற்றிகள் பேசும் முதல்வரின் உழைப்பை! அந்த உழைப்பை பேசும் முதல்வரின் தடையில்லா வெற்றிகளை! சரித்திரங்கள் பேசும் முதல்வரின் சாதனைகளை! இந்த சாதனைத் தொடரில் என்றென்றும் தமிழ்நாடு எங்கள் முதல்வரோடு நிற்கும்! ”

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்